# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2356/20 - 2023 නොවැම්බර් මස 01 වැනි බදාදා - 2023.11.01

*2356/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்டம் தொடர்பில், அவ்வட்டவணையின் II நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை, 2023, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இக்கட்டளை மூலம் விதிக்கின்றேன்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விதிக்கப்பட்ட 2023, சனவரி மாதம் 04 ஆந் திகதிய 2313/ 34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சீனிக்கான (சுங்கத் தலைப்பு இலக்கம் 17.01) வெளியிடப்பட்ட கட்டளை 2023, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக இரத்துச் செய்யப்படுகின்றது.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, நவெம்பர் 01.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபார பண்ட அறவீடு |
| 1 | 17.01 | | திண்மையான உருவில் உள்ள கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான சுக்கோறோஸ் வெல்லமும் | |
| | | | பிற : | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப் பட்டவை : | |
| | | 1701.91.10 | துருவமாணியின் வாசிப்பானது, 99.7° இற்கு அதிகமாக அல்லது சமமாக இருத்தல் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.91.20 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5° இற்கு அதிகமாக அல்லது சமமாக மற்றும் 99.7° இற்கும் குறைவாக இருத்தல் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.99 | பிற : | |
| | | 1701.99.10 | துருவமாணியின் வாசிப்பானது, 99.7° இற்கு அதிகமாக அல்லது சமமாக அளவைக் கொண்ட கரும்பு வெல்லம் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.99.20 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5° இற்கு அதிகமாக அல்லது சமமாக மற்றும் 99.7° இற்கு குறைவான அளவைக் கொண்ட கரும்பு வெல்லம் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.99.30 | துருவமாணியின் வாசிப்பானது, 99.7° இற்கு அதிகமாக அல்லது சமமான அளவைக் கொண்ட பீட் வெல்லம் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.99.40 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5° இற்கு அதிகமாக அல்லது சமமான மற்றும் 99.7° இற்கும் குறைவாக உள்ள பீட் வெல்லம் | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |
| | | 1701.99.90 | பிற | கிலோகிராமிற்கு ரூ. 50.00 |

EOG 11-0025

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.